# உங்கள் குழந்தையின் 3-ஆம் ஆண்டு உடல்நலப் பரிசோதனைக்கு முன்பாக

நீங்கள் வருவதற்கும் முன்பாக இணையதளத்திலுள்ள 'வளர்ச்சி நிலை குறித்த பெற்றோரது மதிப்பீடு' (Parent Evaluation of Developmental Status (PEDS)) எனும் மொழிபெயர்க்கப்பட்ட பிரதியினை www.mhcs.health.nsw.gov.au அச்சிட்டு, அதனைப் பூர்த்திசெய்து எடுத்து வாருங்கள், அல்லது உங்களது குழந்தையின் உடல்நலத் தாதியை உங்களுக்கு உதவுமாறு கேளுங்கள்.

| **குழந்தைக்கு 3 வருடங்கள் ஆனதிலிருந்து பூர்த்தி செய்யப்பட வேண்டிய காது கேட்கும் திறன் குறித்த ஆபத்துக் கூறுகள்** | **ஆம்** | **இல்லை** | **உறுதியாய்த் தெரியவில்லை** |
|---|---|---|---|
| உங்கள் குழந்தையின் காது கேட்கும் திறன் குறித்து கவலைப்படுகிறீர்களா? | ☐ | ☐ | ☐ |
| கடந்த ஆண்டில் நான்கு முறைகளுக்கும் மேலாக உங்கள் குழந்தைக்குக் காதில் நோய்நுண்மப் பரவல் (infection) ஏற்பட்டிருக்கிறதா? | ☐ | ☐ | ☐ |
| தொடர்ந்த சளி அல்லது/மற்றும் பச்சையான மூக்குக் கசிவு உங்கள் குழந்தைக்கு இருக்கிறதா? | ☐ | ☐ | ☐ |
| கடந்த ஆண்டில் உங்கள் குழந்தைக்குக் காதிலிருந்து கசிவு ஏதும் இருந்திருக்கிறதா? | ☐ | ☐ | ☐ |
| சளி பிடித்திருக்கும் போது உங்கள் குழந்தைக்குக் காது கேட்பது கடினமாக இருக்கிறதா? | ☐ | ☐ | ☐ |
| சொன்னதைத் திரும்பச் சொல்லுமாறு உங்கள் குழந்தை அடிக்கடி கேட்கிறதா? | ☐ | ☐ | ☐ |
| நீங்கள் சொல்வதைச் செய்வதில் உங்கள் குழந்தை கஷ்டப்படுகிறதா? | ☐ | ☐ | ☐ |
| உங்கள் குழந்தை தெளிவாகப் பேசுகிறதா? | ☐ | ☐ | ☐ |
| பேசும் போது வார்த்தைகளைத் தொகுப்பாக உங்கள் குழந்தை பயன்படுத்துகிறதா? | ☐ | ☐ | ☐ |
| திசைகளை உங்கள் குழந்தையால் பின்பற்ற முடிகிறதா? | ☐ | ☐ | ☐ |
| உரையாடல்களில் உங்கள் குழந்தை சுறுசுறுப்பாய்ப் பங்கேற்கிறதா? | ☐ | ☐ | ☐ |
| சத்தம் எங்கிருந்து வருகிறது என்று உங்கள் குழந்தையால் சொல்ல இயலுகிறதா? | ☐ | ☐ | ☐ |
| கேள்விகளுக்கு உங்கள் குழந்தை அளிக்கும் பதில்கள் அடிக்கடி பொருத்தமற்றதாக இருக்கின்றனவா? | ☐ | ☐ | ☐ |
| ஏதாவது ஒன்றைச் செய்யச் சொல்லி நீங்கள் சொல்லும் போதும், மற்ற குழந்தைகள் செய்வதைப் பார்த்துச் செய்யும் போதும் உங்கள் குழந்தை மெதுவாகச் செயல் புரிகிறதா? | ☐ | ☐ | ☐ |
| முன்பள்ளி/குழந்தை கவனிப்பு ஆகியவற்றிற்கு உங்கள் குழந்தை அதிக நாட்களுக்குச் செல்வதில்லையா? | ☐ | ☐ | ☐ |
| தன்னிடம் பேசுபவர் அல்லது சத்தம் வரும் இடம் ஆகியவற்றை நோக்கி உங்கள் குழந்தை அடிக்கடி ஒரு காதைத் திருப்புகிறதா? | ☐ | ☐ | ☐ |
| குழுக்களில் இருக்கும் போது உங்கள் குழந்தை கவனக் குறைவாகவோ அல்லது இடையூறு ஏற்படுத்துவதாகவோ இருக்கிறதா? | ☐ | ☐ | ☐ |
| வாய் மூலமாக தரப்படும் உத்தரவுகளை உங்கள் குழந்தை அடிக்கடி தவறாகப் புரிந்து கொள்கிறதா? | ☐ | ☐ | ☐ |

வேலைகளைச் செய்வதற்கும் முன்பாக, என்ன செய்ய வேண்டும் எனத் தெரிந்து கொள்ள உங்கள் குழந்தை ஆசிரியரை எதிர்பார்க்காமல் சக குழந்தைகளை எதிர்பார்க்கிறதா?

நடவடிக்கைகளில் கலந்து கொள்ள உங்கள் குழந்தை மறுக்கிறதா?

உங்கள் குழந்தை தனித்திருப்பதை விரும்புவது போல் தோன்றுகிறதா?

**கண் பார்வை சம்பந்தப்பட்ட கேள்விகள்**

உங்கள் குழந்தையின் கண்பார்வை குறித்து விசனப்படுகிறீர்களா?

உங்கள் குழந்தைக்கு நேரற்ற கண் (turned eye (Squint)) அல்லது செயல்திறன் குறைந்த கண் (lazy eye (strabismus)) இருக்கிறதா?

சிறிய பொருட்களைப் பார்ப்பது உங்கள் குழந்தைக்குக் கஷ்டமாக இருக்கிறதா?

தூரத்தில் தெரியும் பொருட்களில், உதாரணமாக, விமானங்கள் மற்றும் பறவைகள் போன்றவற்றில் உங்கள் குழந்தை ஆர்வம் காட்டுகிறதா?

குடும்பத்தில் யாருக்காவது பார்வைக் கோளாறுகள் இருக்கின்றனவா?

**முடிவு** ☐ சாதாரணமானது ☐ பார்க்க வேண்டியவர் ☐ மீளாய்வு